ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1986/10 - 2016 සැප්තැම්බර් මස 27 වැනි අඟහරුවාදා - 2016.09.27
*1986/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பு மறுசீரமைத்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக்குடியரசின் 2013.11.19ஆந் திகதிய 1837/8 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பில் 6.2.2, 6.2.3.2 ii, 6.2.3.3 v, 6.2.4.3 ஆகிய பிரிவுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.*

*அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியதியின் பிரகாரம்,*

*அனுர ஜயவிக்கிரம,*
*செயலாளர்,*
*சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.*

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,*
*இல. 385,*
*வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2016 செப்தெம்பர் 27.*

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு*

**இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பு**

*6.2.2*

*வருடாந்த பயிற்சி வழங்குவதற்குத் தேவையான எண்ணிக்கையில் 25% இனை விஞ்ஞானவியல் (தாதியர்) பட்டதாரி விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சுகாதார, போசணை மற்றும்*

*சுதேச வைத்திய அமைச்சினால் நடாத்தப்படும் 06 மாத தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*6.2.3.2.* ii

*உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும். விஞ்ஞானவியல் (தாதியர்) பட்டம் பெற்றவர்களை தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு இணைத்துக் கொள்ளும் போது அப்பட்டதாரிகளுக்கு இந்நியதி உரித்துடையதல்ல.*

*6.2.3.3* v

*இணைத்துக்கொள்ளும் எண்ணிக்கையில் 5% ஆண்களாகும். எவ்வாறிருப்பினும், சேவை அவசியத்திற்கேற்ப ஆண் விண்ணப்பதாரிகளை இணைத்துக் கொள்ளும் சதவீதம் 5% எனும் உச்ச எல்லையின் கீழ் காலத்திற்குக்காலம் மாற்றம் செய்ய முடியும். எனினும், தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விஞ்ஞானவியல் (தாதியர்) பட்டதாரிகளுக்கு இந்நியதி உரித்துடையதல்ல.*

*6.2.4.3* ***விஞ்ஞானவியல் (தாதியர்) பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல்***

*தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறியினை சிறப்பாக நிறைவு செய்த தாதியர் பட்டதாரிகள் பட்டம் வலுவிற்கு வரும் திகதி மற்றும்* G.P.A *பெறுமதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு தயாரிக்கப்படும் திறமை பட்டியலின் பிரகாரம் இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பின்* III *ஆம் தரத்தின் பதவி நிலை தாதி உத்தியோகத்தர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளப்படுவர்.*

A. *ஒரே பல்கலைக்கழகத்தின் ஒரே குழுவினருக்கு நியமனம் வழங்கும் போது பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்* G.P.A *பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு திறமைப் பட்டியலை தயாரித்தல் ;*

B. *ஒரே பல்கலைக்கழகத்தின் இரு குழுவினருக்கு அல்லது பல்வேறு பல்கலைக்கழங்கள் மூலம் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் பட்டம் வலுப்பெறும் தினம் மற்றும்* G.P.A *பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு திறமைப் பட்டியலை தயாரித்தல்.*

*10- 210*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*